தால் அவைகளின் நுரையீரலில் நோய் வந்திருக்கிறது என்றும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலிருந்து அவைகள் மாற்றப்பட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, கிண்டி பார்க்குக்குப் பக்கத்தில் 100-150 ஏக்கர் ஒதுக்கப்பட்டால் அங்கே வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று, வண்டலூருக்குப் பக்கத்தில் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்டலூர் சென்னைக்கு வெகுதூரத்தில் இருப்பதால், வெளியிலிருந்து வருபவர்கள் அங்கே சென்று பார்ப்பது கஷ்டம் என்கிற காரணத்தால், கிண்டியில்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மேலக்கட்டனை—சின்னமநாய்க்கன்பட்டி சாலை

*253 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளைக்கு சின்னமநாயக்கம்பட்டியிலிருந்து சாலை அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை எப்போது வந்துள்ளது?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஒரு கோரிக்கை 3—5—1971 அன்று வந்துள்ளது.

(இ) மேற்படி கோரிக்கை ஊராட்சி ஒன்றியத்தின் பரிசீலனையில் உள்ளது.

வேலாண்டிபாளையத்தில் பாலம்

*254 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள தெலுங்கு பாளையம் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த வேலாண்டிபாளையம் என்ற ஊரின் நடுவேயுள்ள பள்ளத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை. அடுத்த கேள்வி . . .255.

THIRU K. T. K. THANGAMANI: Has question No. 254 been put?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வினு கேட்கப்பட்டு, விடையும் அளிக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அந்த 254-வது கேள்விக்குத்தான் துணை வினு கேட்க எழுந்தார்கள். வேலாண்டிபாளையத்தின் அருகே பாலம்

கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு உண்டா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறிவிட்டார்கள். அதற்கு மேல் அதிலே துணைக் கேள்வி கேட்க என்ன இருக்கிறது? சில கேள்விகளுக்குத்தான் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படலாம். அது அந்தந்த நேரத்தில் சபாநாயகர் பார்த்துச் செய்யவேண்டியது.

இன்னொன்றையும் நான் இந்த மன்றத்திற்கு இந்த கேள்வி நேரத்தில் ஒரு வேண்டுகோளாக விடுக்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தேன். உங்களுக்கெல்லாம் கொஞ்சகாலத்திற்கு முன்பு தெரியும், மாண்புமிகு அமைச்சர்களிடம் விரைவாகப் பதில்கள் அளிக்கவேண்டும், கேள்வி நேரத்தில் கேள்விகள்கூட இல்லை என்று கூறப்பட்டது. இங்கே இன்றையதினத்தில் மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் எல்லா இலாகாக்களுக்கும் உடனடியாகப் பதில் அனுப்பவேண்டும் என்று சொல்லியதன் காரணமாக இன்று 800 கேள்விகளுக்குப் பதில்கள் வந்திருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அமைச்சர்களுக்கும், அந்த இலாகாவின் செயலாளர்களுக்கும் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 800 கேள்விகளுக்கான விடைகள் இப்போது நம்முடைய சட்டப் பேரவைத் துறையில் இருக்கின்றன. இவ்வளவு விடைகள் இருக்கிற காரணத்தால் இன்று முதற்கொண்டு 50 கேள்விகள் வினாப் பட்டியலில் இடம் பெறுகின்றன. அந்த 50 கேள்விகளுக்கும் துணைக்கேள்விகள் கேட்கக்கூடாது என்பது அல்ல, துணைக்கேள்விகள் கேட்க உரிமை இல்லை என்பது அல்ல. மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் ஒரு பெரிய வேண்டுகோளாக கேட்டுக் கொள்வேன், தேவையான கேள்விகளுக்குத் துணைக்கேள்வி கேளுங்கள். உள்ளூர் பிரச்னைகளைப்பற்றிய ஒரு கேள்விக்கு, உதாரணமாக வேலாண்டிபாளையத்தில் பாலம் கட்டுவதற்கு உதவி என்று கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் கூறியபிறகும், அதுபற்றிப் பரிசிலனை செய்யுமா அரசாங்கம் என்று கேட்பதைக் காட்டிலும், கேட்காமல் இருக்கலாம். அந்தக் கேள்விகள் சுருக்கமாக இருக்கவேண்டும். மூலக்கேள்விகளை ஒட்டிய துணைக்கேள்விகள் கேட்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கேள்விகள் கூடுமானவரையில் சுருக்கமாகக் கேட்கப்படலாம். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் சொல்கிறேன். அவர்கள் அனுபவம் உள்ள உறுப்பினர். நெடு நேரம் ஒரு கேள்வியைச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. மூன்று கேள்விகள் கேட்கும் நேரத்தில் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டாம். சுருக்கமாகவும் விரைவாகவும் துணைக் கேள்வியைக் கேட்கலாம். அமைச்சர் அவர்களுக்கும் சொல்லுகிறேன். அவர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும். சில கேள்விகளுக்கு அதிகநேரம் பதில் கொடுப்பது அவசியம் இல்லை.

இதுபற்றி சபாநாயகர்கள் மாநாட்டில்கூட விவாதம் வந்தது. அங்கே சொன்னார்கள், ஏறக்குறைய அரை நிமிஷம், முக்கால் நிமிஷத்தில் கேள்வி-பதில்கள் இருக்கவேண்டும் என்று. அப்படிப்பட்ட ஒரு நிலை வரவேண்டும். வெகு நீளமான பதில்களாக இருக்குமானால், அமைச்சரவர்கள் அவற்றை அச்சடித்துக் கொடுத்துவிடலாம். நெடுநேரம் பதில்கள் சொல்லிக் கொண்டிருப்பது சுருக்கப்படுவதன் மூலம் வேறு பல துணைக் கேள்விகள் கேட்க இடம் ஏற்படும். இந்த விவகாரத்தில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும், அமைச்சர்களும், உறுப்பினர்களும். தினம் 50 கேள்விகள் என்று வைத்துக்கொண்டாலும், 18-ம் தேதி முடிய 300, 400 கேள்விகள்தான் எடுத்துக்கொள்ளமுடியும்.

பதில்கள் கொடுக்க முடியும். துணைக் கேள்விகள் கேட்பதிலும், பதில்கள் கொடுப்பதிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், நானும் தாராளமாக நடந்துகொள்ள எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மூர் அங்காடி எதிரிலுள்ள நடைபாதைக் கடைகள்

*255 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர் மார்க்கெட்டுக்கு எதிரில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்றிவிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அந்தக் கடைகள் வேறு எந்த இடத்திற்கு மாற்றப் படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Sweedish Mission Hospital in Tiruppathur

*256 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any financial assistance has been given to the Sweedish Mission Hospital in Tiruppathur, Ramanathapuram district during 1969–70–71–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பொள்ளாச்சியில் அரசு மருத்துவ மனை

*257 வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில், பல் வைத்தியம், கண் வைத்தியம் குடும்பக்கட்டுப்பாட்டுத் துறை ஆகியவற்றுக்குப் புதிதாக மருத்து வர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், இவற்றிற்கு அங்கு கட்டட வசதிகள் செய்யப்பட்டுள் ளனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனையில் பல் வைத்தியம், குடும்பக் கட்டுப்பாடுத் துறை ஆகியவற்றிற்காகப் புதிதாக மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர். கண் வைத்தியப் பகுதி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) மேற்கண்ட பகுதிகளுக்குத் தற்போது தனிக் கட்டட வசதி இல்லை.